**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.60/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | மஞ்சுளா | Prosecution | LW–1 as PW1. |
| Father Name | க/பெ. ஜோதி | Defence | |
| Village | நந்திமங்களம் | Taluk | காட்டுமன்னார்குடி |
| District | கடலூர் | Age | 42/2025 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **25.11.2025.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரில் வசித்து வீட்டு வேலை மற்றும் கூலி செய்து வருகிறேன். கடந்த **20.12.2020** ம் தேதி இரவு **9.00** மணியளவில் நான் எனது வீட்டில் இருந்த போது எனது செல்போனுக்கு எனது கணவர் எண்ணிலிருந்து அழைப்பு வந்தது. நான் எடுத்து பேசியதில் எனது கணவர் புத்தூர் அருகில் அடிபட்டு இறந்து விட்டதாக யாரோ ஒருவர் தகவல் கூறினார். நான் சம்பவ இடத்திற்கு வருவதற்குள் தனியார் ஆம்புலன்ஸில் எனது கணவரை சீர்காழி**GH**க்கு அழைத்து சென்றார்கள். நான் சீர்காழி **GH**க்கு சென்ற போது எனது கணவரின் உடலை சவக்கிடங்கிற்கு எடுத்து சென்றார்கள். அதன் பின் மறுநாள் நானும் எனது மருமகனும் சேர்ந்து ஆனைக்காரன் சத்திரம் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும். **அந்த புகார் மனு அசாஆ.1 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு விபத்து தொடர்பாக தகவல் கூறிய நபர் யார் என்று தெரியாது என்றால் சரிதான். நான் எத்தனை மணிக்கு வந்தேன் என்றால் மறுநாள் காலை **6.00** மணிக்கு வந்து பார்த்தேன். நான் இந்த வழக்கில் புகாரினை

எப்போது கொடுத்தேன் என்றால் மறுநாள் காலை 9.00 மணிக்கு புகார் கொடுத்தேன். புகார் கொடுக்க நானும் எனது மருமகன் பாலமுருகனும் சீர்காழி GHயில் இருந்த போது புகார் கொடுத்தோம். புகாரினை எழுதியது யார் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான். யாரோ எழுதி கொடுத்தில் நான் கையொப்பம் இட்டேன் என்றால் சரிதான். எந்த வாகனத்தால் விபத்து ஏற்படுத்தியது என்றும் அதன் பதிவு எண் தெரியுமா என்றால் அது பற்றி தெரியாது. இந்த வழக்கில் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

2 நாள் கழித்து என்னை எனது வீட்டில் வைத்து போலிசார் விசாரித்தார்கள் என்றால் சரிதான். அப்போதும் முதல் விசாரணையில் கூறிய விபரத்தைதான் போலிசாரிடம் கூறினேன் என்றால் சரிதான். எனது புகாரில சொல்லியுள்ளது போல் எதிரிக்கும் இந்த விபத்திற்கும் எந்த வித சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. என் கணவர் மீது மோதிய வாகனத்தை எங்கும் நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்தின் போது என் கணவர் எந்த திசையிலிருந்து எந்த திசை நோக்கி சென்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் கணவர் தான் தவறான திசையில் வந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றாலும் சரியல்ல.

நான் சொல்வது போல் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் எந்த வித புகாரும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. போலிசார் விசாரித்ததாக கூறப்படுவதும் பொய் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு தொடர்பாக நஷ்ட ஈடு வழக்கு போட்டுள்ளேனா என்றால் போட்டுள்ளேன். எதிரிக்கும் இந்த விபத்திற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது நஷ்ட ஈடு பெருவதற்காக போலிசார் சொல்லிகொடுத்ததற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி வந்து அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வந்து விபத்தை ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறு விசாரணை இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.60/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | ஜெயகாந்தன் | Prosecution | LW-4 as PW2. |
| Father Name | முத்துக்குமாரசாமி | Defence | |
| Village | நந்திமங்களம் | Taluk | காட்டுமன்னார்குடி |
| District | கடலூர் | Age | 48/2025 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **25.11.2025.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த **2020** ம் ஆண்டு டிசம்பர் மாதம் தேதி நினைவில் இல்லை ஒரு நாள் நானும் ரங்கராஜன் என்பவரும் விபத்து நடந்த சம்பவ இடத்திற்கு ஊரில் இருந்து மேலும் **10** நபர்களை அழைத்து கொண்டு வருமாறு போலிசார் கேட்டதால் நாங்கள் வந்தோம். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதது தான். **அந்த கையெழுத்து மட்டும் அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் கேட்டுக்கொண்டதால் கையெழுத்து போட்டு கொடுத்தேன். அதிலுள்ள விபரம் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

**அசா.1 மஞ்சுளாவை எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.** ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த **24.12.2020** ம் தேதி காலை **9.00** மணிக்கு நானும் ரங்கராஜன் என்பவரும் சம்பவ இடத்தில் நின்றிருந்த போது ஆனைக்காரன்சத்திரம் போலிசார் எங்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றாலும் அதற்கு சாட்சியாக

நான் கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல. மேற்படி விபரங்களை போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.60/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | ரங்கராஜன் | Prosecution | LW-5 as PW3. |
| Father Name | சீனிவாசன் | Defence | |
| Village | நந்திமங்களம் | Taluk | காட்டுமன்னார்குடி |
| District | கடலூர் | Age | 49/2025 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **25.11.2025.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள சாட்சி கையொப்பங்களில் 2வது கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள விபரம் எனக்கு தெரியாது. **அந்த கையொப்பம் மட்டும் அசாஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

**அசா.1 மஞ்சுளாவை எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.** ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 24.12.2020 ம் தேதி காலை 9.00 மணிக்கு நானும் ஜெயகாந்தன் என்பவரும் சம்பவ இடத்தில் நின்றிருந்த போது ஆனைக்காரன்சத்திரம் போலிசார் எங்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றாலும் அதற்கு சாட்சியாக நான் கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல. மேற்படி விபரங்களை போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது

எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**